www.padippakam.com



# பூதத் தம்பியை கபடமாய் கொன்ற சிங்கள முதலியார்

39

யாழ் கோட்டையிலிருந்து வெளியே வந்த அனைவரும். ஆண் - பெண் வேறுபாடின்றி ஒல்லாந்துப் படைகளால் நிர்வாணமாக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டனர். அனைவரும் வெளியே வந்ததும் முதல் நாள் ஒல்லாந்துப் படையைச் சேர்ந்த அதிகாரிகள் தாங்கள் விரும்பிய பொருட்களை கோட்டைக்குளிருந்து எடுத்துக் கொள்ளவும் மறுநாள் - சாதாரண படை வீரர்கள் தாங்கள் விரும்பிய பொருட்களை எடுத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டனர்.

கோட்டைக்குள் அதிகளவுக்கு அழுக்குகள் குவிந்து துர்நாற்றம் வீசியதாலும், முற்றுகையின் போது கொல்லப்பட்டவர்களை அடக்கம் செய்யாமல் அப்படியப்படியே மதிலோரங்களில் தூக்கிப் போட்டதால் அந்தப் பிணங்கள் எல்லாம் அழுகி சகிக்கமுடியாத அளவுக்கு நாற்றம் எடுத்ததாலும், அவற்றையெல்லாம் அப்புறப்படுத்தி கோட்டையைச் சுத்தப்படுத்திய பின்பே அதற்குள் ஒல்லாந்தரால் குடிபுக முடிந்தது.

சிறைபிடிக்கப்பட்ட போர்த்துக்கேயர்களில், கன்னிப் பெண்களையும், இளம் விதவைகளையும் ஒல்லாந்தர்கள் தமக்கென எடுத்துக் கொண்டனர். எஞ்சியோரில் போர்த்துக்கல்லுக்குப் போக விரும்பியவர்களை ஆடு, மாடுகளை பட்டியில் அடைப்பது போல் கப்பல்களில் நிறைத்து அனுப்பிவைத்தனர். அவ்வாறு தமது தாய்நாட்டிற்குப் போக விரும்பாது யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருந்து ஒல்லாந்தரின் மேலாண்மையை ஏற்று நடக்க சம்மதித்தவர்களுக்கு கீழ் நிலை உத்தியோகங்கள் வழங்கப்பட்டன.

போர்த்துக்கேயருடன் ஒப்பிடும் போது, யாழ்ப்பாண வாசிகளுக்கு ஒல்லாந்தர்கள் மேலானவர்களாகவும், விசித்திரமானவர்களாகவும் இருந்தார்கள்.



ஒல்லாந்தருக்கு எதிரான சதி முயற்சியில் ஈடுபட்டவர்களுக்குத் தண்டனை வழங்கப்படுகின்றது.

போர்த்துக்கேயர்கள் தீவிரமான கிறிஸ்தவ மத வெறியும் அதற்காக ஈவிரக்கமில்லாமல் எந்த விதமான கொடூரச் செயலையும் செய்யக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். ஆனால் ஒல்லாந்தர்களிடம் அந்தளவுக்கு மதவெறி இருக்கவில்லை. அத்தோடு அவர்களது மதம் திருத்தி அமைக்கப்பட்ட கிருஸ்தவமதம். அதாவது புரட்டஸ்தாந்து மத்மாக இருந்தது. அவர்களது முழு நோக்கமும் வர்த்தக நலனையே அடிப்படையாக கொண்டிருந்தது. தங்களது வர்த்தக நலனை பேணிக் காப்பதற்காக அவர்கள் இயன்றவரை சுதேசிய மன்னர்களை அனுசரித்துப் போகிறவர்களாகவும் மத அரசியல் நோக்கங்களுக்காக போர்த்துக்கேயர்களைப் போல் சுதேச மக்களுக்கு பெரியளவுக்கு கொடுமையிழைக்காதவர்களாகவும் இருந்தார்கள். குறிப்பாக கண்டி அரசன், அவர்களுக்குகெதிராக பல அவமரியாதைகளைச் செய்த போதும் அவர்களது தூதுவனை கொலை செய்த போதிலும் தங்களுடைய வர்த்தக நடவடிக்கைகளுக்கு அவனது உதவி தேவை என்ற காரணத்தினால் அவர்கள் அதையெல்லாம் சகித்துக்கொண்டனர்.

யாழ்ப்பாணம் ஒல்லாந்தர் ஆட்சிக்குக் கீழ் வந்த சிறிது நாட்களில் அவர்களது ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான சதி முயற்சி ஒன்று நடைபெற்றது. அநேகமாக போர்த்துக்கேயர்களால் வழி நடத்தப்பட்ட கிறிஸ்தவர்களே இந்தச் சதி முயற்சியின் பின்னணியில் இருந்தார்கள்.

மனுவேல் அந்திறாது என்னும் சிங்கள முதலியாரே இது பற்றி முதல் முதலில் அறிந்து ஒல்லாந்தருக்குத் தெரியப்படுத்தினார். அதை அடுத்து இச்சதிக்கு தலைமை தாங்கிய பதினான்குபேர் கைது செய்யப்பட்டனர். அதில் கல்தேறா (Caldera) என்னும் கத்தோலிக்க மதகுரு உட்பட ஆறு பேர் போர்த்துக் கேயர்கள். ஏனையோர் யாழ்ப்பாணத்தவர்கள். அவர்களில் டொன்லூரிஸ் - பூதத்தம்பி என்னும் யாழ்ப்பாண முதலியாரின் பெயர் முக்கியமானது.

தங்களுக்கெதிரான சதி முயற்சியில் ஈடுபட்டவர்களில் மிக முக்கியமானவர்கள் என்று கருதப்பட்ட மூன்று பேருக்கு பார்த்தவர்கள் நடுங்கும் படியான தண்டனை வழங்கப்பட்டது. அதாவது அவர்கள் மூவரும் நடுச்சந்திகளில் நிறுத்தி வைக்கப்பட்ட சிலுவைகளில் பிணைக்கப்பட்டு, ஈரல் அறுக்கப்பட்டு அவர்களது வாயில் திணிக்கப்பட்டது. இரத்தம் சிந்தி அவர்கள் துடிதுடித்து இறந்ததும் அவர்களது தலைகள் வெட்டப்பட்டு பிரதான கடை வீதியில், ஒல்லாந்த அரசருக்கு எதிராக சதி செய்தவர்களுக்கு கிடைத்த தண்டனை என்கின்ற அறிவித்தலுடன் அவை ஈட்டி முனையில் குத்தி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. போர்த்துக்கேய மத குரு கல்தேராவும் தலை வெட்டிக் கொல்லப்பட்டார். ஏனைய பத்துப் பேரும் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டபின் அவர்களது உடல்களும் கழுகுகளும் - பருந்துகளும் கொத்தித் தின்பதற்காக ஒதுக்குப்புறமாக இருந்த மரங்களில் கட்டித் தொங்கவிடப்பட்டன.




அக்காலத்தில் இறந்த ஒருவரது உடலை உரிய மத முறைப்படி அடக்கம் செய்யாவிட்டால் அவரது ஆத்மா சாந்தியடையாது அலைந்து அலறித் துடித்துக் கொண்டேயிருக்கும் என்ற நம்பிக்கை மக்களிடமிருந்தது. ஒல்லாந்தருக்கும் அது இருந்தது. அதனாலேயே தங்களால் தண்டனை வழங்கப்பட்ட அந்தப் 14 பேரது உடல்களையும் அவர்கள் மரத்தில் தொங்கவிட்டார்கள். கி.பி 1658-ல் நடந்த இந்தக் காட்சியை பல்தேயஸ் பாதிரியார் சித்திரத்தில் வரைந்து வைத்துள்ளார்.

ஒல்லாந்தருக்கு எதிரான சதியில் பூதத்தம்பி முதலியாருக்கு எந்தவித சம்பந்தமுமில்லையென்றும் சிங்களவரான அந்திறாது முதலியார் தனக்கும் பூதத்தம்பிக்கும் உள்ள பகையின் அடிப்படையில் தருணம் பார்த்து பூதத்தம்பியை மாட்டிவிட்டு, தந்திரமாகக் கொலை செய்து விட்டதாக மயில்வாகனப் புலவர் கூறுகிறார். பூதத்தம்பி இறந்து 78 வருடங்களின் பின், தான் எழுதிய நூலில் இதைக் கூறியுள்ளதால், அது தான் உண்மை என்பதை முதலியார் இராஜநாயகமும் ஏற்றுக் கொண்டுள்ளார். பூதத்தம்பியைப் பொறுத்தவரை யாழ்ப்பாணத்தை இராமன் ஆண்டாலும் இராவணன் ஆண்டாலும் ஒன்று தான், அதனால் அவன் ஒல்லாந்தருக்கு எதிராக சதி செய்ய வேண்டிய அவசியமே இல்லை என்பது முதலியார் இராஜநாயகத்தினுடைய வாதமாகும்.

போர்த்துக்கேயர்களைப் போலவே ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தை நான்கு பிரிவுகளாகவும், 32 கோவில் பற்றுக்களாகவும் பிரித்து நிர்வாகம் நடாத்தினர். நான்கு பிரிவுகளும் யாழ்ப்பாணத்திற்கு சமீபமாக இருந்த தீவுப் பற்றுக்களுக்கும் ஒவ்வொரு முதலியாரும் இறைசுவரும் (வரி வசூலிப்பவர்) எழுது வினைஞரும் நியமிக்கப்பட்டனர். யாழ்ப்பாண நிர்வாகம், கொழும்பிலுள்ள ஒல்லாந்த தேசாதிபதிக்குக் கீழ் இருந்தாலும் கொழும்போடு இணைந்ததாக இருக்கவில்லை. யாழ்ப்பாண நிர்வாகமானது ஒரு கம்மாந்தோரின் (Commandeur) கீழ் தனியாகவே இருந்தது. யாழ்ப்பாணக் கம்மாந்தோரின்- அதிகாரத்தின் கீழ் மன்னார் திருக்கோணமலை மட்டக்களப்பு ஆகிய மூன்று பிரதேசங்களும் இருந்தன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த தீவுப் பகுதிக்கெல்லாம் ஒல்லாந்து நாட்டுப் பெயர்களே சூட்டப்பட்டன. காரைதீவுக்கு (நகர்) அம்சர்டாம் (Amsterdam) என்றும்; ஊர்காவற்துறைக்கு, கைற்ஸ் (Kayts) என்றும், தண்ணித்தீவுக்கு லயிடின் (Leyden) என்றும், புங்குடுதீவுக்கு மிட்டில்பேர்க் (Middle berg) என்றும், அனலைதீவுக்கு றொற்றர்டாம் (Rotterdam) என்றும், இரணைத்தீவுக்கு ஹூன் (Hoon) என்றும் பெயர் சூட்டப்பட்டன.

கி.பி. 1658 இல் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சனத்தொகை 1 இலட்சத்து 20 ஆயிரம் என மதிக்கப்பட்டுள்ளது. 1766 இல் இது 1 இலட்சத்து 87 ஆயிரத்து 600 ஆக உயர்ந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மன்னர் காலத்தில் வழக்கிலிருந்த நீதி முறையின் அடிப்படையிலேயே நீதி பரிபாலனம் நடந்தது. ஒல்லாந்தர்கள் யாழ்ப்பாணத்தில் பல தலைமுறையாகக் கையாளப்பட்டு வந்த தேச வழமைச் சட்டத்தை மாற்றாமல் அதையே யாழ்ப்பாணத்துக்கான நீதி பரிபாலனச் சட்டமாகவும் ஏற்றுக் கொண்டனர்.

கி.பி 1707 இல் ஒல்லாந்தத் தேசாதிபதி கொர்னேலிஸ் ஜோன் சிம்மன்ஸ் (Cornelis Joan Simonśz) இன் கட்டளைப்படி கிளாஸ் ஐசாக்ஸ் (Claasz Isaacs) என்பவரால் தொகுத்து ஒரு சட்ட நூலாக வெளியிடப்பட்ட இத்தேச வழமைச் சட்டத்தை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 12 முதலிமார்கள் உண்மையான சட்டம் என்று அங்கிகரிப்பதாக கையொப்பமிட்டுள்ளனர்.

இத் தேச வழமைச் சட்டம் 1) சுதந்திரங்களும் ஆதன உரிமைகளும் 2) மஞ்சனீர்ப் பிள்ளை (தத்தெடுத்தல்) 3) காணிகள் ஆட்சி 4) நன்கொடை 5) ஒற்றியும் ஈடும் 6) கூலிக்குப் பிடித்தல் 7 )கொள்வனவு விற்பனவு 8) சிறைகள் 9) வட்டிக்குப் பணம் கொடுத்தல் என்றும் ஒன்பது அதிகாரங்களைக் கொண்டிருந்தது. இச் சட்டவரைவு வெளியிடப்பட்ட போது சிங்களப் பகுதிகளுக்கு குறிப்பாக ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்பட்டிருந்த கொழும்பு நிர்வாகப் பகுதிக்கு, காலி கம்மாந்தோர் நிர்வாகப் பகுதிக்கோ, அவர்களது ஆட்சிக்குட்படாதிருந்த கண்டி அரசனுடைய நிர்வாகப் பகுதிக்கோ தனியாக நீதி நிர்வாகம் எதுவும் ஒரு இன மக்கள் என்ற அடிப்படையில் உருவாக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

- நக்கீரன்

படிப்பகம்